**FIRST INFORMATION REPORT** — **TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8044327

1. District மாவட்டம் : Kanchipuram. PS காவல் நிலையம்: Vigilance & Anti-Corruption Year ஆண்டு: 2021 FIR No. மு.த.அ. எண்: 13/AC/2021/KM Date நாள்: 29.11.2021 10.00 hrs.

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 21.11.2021 & Date to : நாள் வரை at 16:00 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 23.11.2021 Time to : நேரம் வரை at 11:00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.11.2021 Time நேரம் : at 09.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s). பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 29.11.2021 Time நேரம் : at 09.00 hrs & 10.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் North-East about 1 km
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி District Social Welfare Office. Kanchipuram.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. V. Krishnaprasad (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Vijayakumar
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு age 32/2021 (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Private Company Worker (g) Address : முகவரி No. 29/14, 12th Street, Vinobaji Nagar, Ashtinapuram, Crompettai, Chennai-64.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tmt. Prema, Assistant District Social Welfare Office Kanchipuram.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

Seen Sd/- 29.11.2021

Seen Sd/- 29/11/21

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Demanded Rs. 25,000/-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்துணர்ப்பம் புகார்:- நான் இன்று 29.11.2021 ந் தேதி காலை 0900 மணியளவில் காஞ்சிபுரம் உணவு நலப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் அலுவலக இருந்த போது திரு. கிருஷ்ணமூர்த்தி வயது 32-த/பெ திரு. விஜயகுமார் நெ. 29/14, 12-வது தெரு விநாயகர் நகர், அம்பத்தூர் ... [illegible] ... விபரம் ... காவல் ... உணவு நலப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு. காஞ்சிபுரம்.

(Continue... attached separate sheet...)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed G. Annadurai Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC Kanchipuram on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Krishnamurthy 29/11/2021 — G.A. [signature] 29/11/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 29/11/2021 12.40 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் G. ANNADURAI
Rank: நிலை Inspector of police V&AC. Kanchipuram. No. எண்

**(FIR in Kanchipuram V&AC, Cr.No.13/AC/2021/KM, continue )**

ஐயா, நான் மேற்படி விலாசத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் எம்.பி.எ.,படித்துள்ளேன். தற்போது தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வருகிறேன். எனக்கு உடன் பிறந்தவர் ஒருவர் என் அண்ணன் மோகன்பாபு, அவருக்கு திருமணம் ஆகி குடும்பத்துடன் தனியாக வசித்து வருகிறார். எனக்கும் வில்லிவாக்கத்தைச் சேர்ந்த திரு.நரசிம்மன்(லேட்), என்பவரின் மகள் அர்ச்சனாவிற்கும் கடந்த 30.10.2017-ந் தேதியில் இரு வீட்டார் சம்மதத்துடன் திருமணம் நடந்தது. என் மனைவியும் TCS அம்பத்தூர் கம்பெனியில் வேலை செய்து வருகிறார். பின்பு எனக்கும் என் மனைவிக்கும் ஒருவருக்கொருவர் அடிக்கடி சண்டை ஏற்பட்டு அவரது அம்மா வீடான வில்லிவாக்கத்திற்கு சென்று விடுவார். இந்நிலையில் கடந்த 21.05.2020 ந் தேதி என் மனைவி அர்ச்சனா தாம்பரம் மகளீர் காவல் நிலையத்தில் குடும்ப பிரச்சனை காரணமாக என் மீதும், என் குடும்பத்தார் மீதும் வரதட்சணை கொடுமை செய்வதாக புகார் அளித்திருந்தார். அப்புகாரினை தாம்பரம் மகளீர் காவல் நிலையத்தில் மனு ரசீது எண்.172/ 2020, நாள்.21.05.2020 தேதியில் பதிவு செய்தார்கள். அம்மனுவின் மீது என்னையும், என் மனைவியையும் கடந்த 11.08.2020-ந் தேதியன்று தாம்பரம் மகளிர் காவல் நிலையத்தில் அழைத்து விசாரித்து, எங்கள் இருவரையும் சமாதானப்படுத்தி சேர்ந்து வாழ அறிவுறுத்தி அனுப்பி வைத்தார்கள். அதன்பின்பு என் மனைவியுடன் சேர்ந்து வாழ பிடிக்காமல் சென்னை உயர்நீதிமன்றத்தில் உள்ள முதன்மை கூடுதல் குடும்ப நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்து (Cr.OP No. 2387/2020) வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில் என் மனைவி அர்ச்சனா மீண்டும் 06.03.2021-ந் தேதி என் மீதும், என் குடும்பத்தார் அனைவரின் மீதும் வரதட்சணை கொடுமை செய்ததாகவும், நான் பல பெண்களுடன் தொடர்பு வைத்துள்ளதாகவும் கூறி தாம்பரம் அனைத்து மகளீர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். பின்பு தாம்பரம் அனைத்து மகளீர் காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் அர்ச்சனா கொடுத்த மனு சம்மந்தமாக இரு தரப்பினரையும் வரதட்சணை கொடுமை நடந்ததற்கான முகாந்திரம் உள்ளதா என விசாரணை செய்ய காஞ்சிபுரம் மாவட்ட சமூக நலம் மற்றும் வரதட்சணை தடுப்பு அலுவலர் அவர்களுக்கு கடிதம் அனுப்பினார். அதன்பேரில் தாம்பரம் மகளீர் காவல் நிலையத்திலிருந்து கடந்த ஜூலை/2021-ம் மாதம் என்னை செல்போன் மூலம் தொடர்பு கொண்டு விசாரணைக்கு காஞ்சிபுரம் சமூக நலத்துறையில் ஆஜராகுமாறு கூறினார்கள். அப்போது நான் வேலை காரணமாக கொடைக்கானல் சென்றிருந்ததால், என்னால் வரமுடியாது எனத் தெரிவித்தேன். பின்பு மீண்டும் தாம்பரம் மகளீர் காவல் நிலையத்திலிருந்து என்னை தொடர்பு கொண்டு காஞ்சிபுரம் சமூக நலத்துறைலிருந்து 11.08.2021-ந் தேதியிட்ட கடிதம் வந்துள்ளதாக கூறி அக்கடிதத்தை என்னிடம் கொடுத்தார்கள். அதில் என்னையும், என் குடும்பத்தாரையும் 19.08.2021-ந் தேதி பகல் 12.30 மணிக்கு காஞ்சிபுரம் சமூக நலத்துறை அலுவலத்திற்கு

**(FIR in Kanchipuram V&AC, Cr.No.13/AC/2021/KM, continue )**

விசாரணைக்கு ஆஜராகுமாறு இருந்தது. அதன்படி நான் 19.08.2021-ந் தேதி பகல் சுமார் 12 மணிக்கு காஞ்சிபுரம் மாவட்ட சமூக நலத்துறை அலுவலகத்திற்கு வந்தேன். அப்போது என் மனைவி அர்ச்சனா மற்றும் அவரது அண்ணன் திரு.சுதர்ஷணன் ஆகியோரும் வந்தார்கள். அங்கு எங்கள் இருவரையும் திருமதி.சங்கீதா, வரதட்சணை தடுப்பு அலுவலர், காஞ்சிபுரம் அவர்கள் விசாரிக்க, அவருக்கு உதவியாக அங்கு பணிபுரியும் திருமதி.பிரேமா உதவியாளர் விசாரணையின்போது இருந்தார். நாங்கள் விசாரணை முடித்து சென்று விட்டோம். பின்பு அக்டோபர்-2020 முதல் வாரத்தில் மீண்டும் தாம்பரம் மகளீர் காவல் நிலையத்திலிருந்து என்னை தொடர்பு கொண்டு 12.10.2021ந் தேதி காஞ்சிபுரம் சமூக நலத்துறை அலுவலகத்திற்கு விசாரணைக்கு செல்லுமாறு கூறினார்கள். எனக்கு உடல்நிலை சரியில்லாமல் பள்ளிக்கரணை, காமாட்சி மருத்துவமனையில் அட்மிட்டில் இருந்ததால், விசாரணைக்கு என்னால் செல்ல முடியவில்லை. அதன்பின்பு 21.11.2021-ந் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் என்னுடைய கைபேசிக்கு காஞ்சிபுரம் மாவட்ட சமூக நலத்துறை அலுவலகத்திலிருந்து விசாரணையின்போது உடனிருந்த பிரேமா என்பவர் பேசுவதாகவும் கூறி உங்கள் மனைவி தாம்பரம் காவல் நிலையத்தில் கொடுத்திருந்த மனுவின் மீது நாங்கள் விசாரணை செய்து முடித்துவிட்டதாவும் தெரிவித்து அறிக்கையை உங்களுக்கு சாதமாக அனுப்ப வேண்டுமென்றால், பணம் லட்சம் செலவாகும் என்று தெரிவித்து அது சம்மந்தமாக பேசுவதற்கு வரும் செவ்வாய்கிழமை 23.11.2021ந் தேதி காஞ்சிபுரம் சமூகநலத்துறை அலுவலகத்திற்கு நேரில் வந்து தன்னை பார்க்குமாறு தெரிவித்தார். அதன்படி நான் 23.11.2021-ந் தேதி காலை சுமார் 11 மணியளவில் காஞ்சிபுரம் மாவட்ட சமூக நலத்துறை அலுவலகத்திற்கு சென்று திருமதி.பிரேமா அவர்களை சந்தித்தேன். அப்போது, அவர் என்னை பார்த்து கடந்த .12.10.2021-ந் தேதி ஏன் விசாரணைக்கு ஆஜராகவில்லை என்று கேட்டார். அதற்கு நான் உடல்நிலை சரியில்லாமல் அட்மிட்டில் இருந்து சிகிச்சை பெற்ற விபரத்தை தெரிவித்தேன். பின்பு அவர் உங்கள் விசாரணை அறிக்கையை நான் தான் தயார் செய்வேன் என்றும் அந்த விசாரணை அறிக்கையை விரைவாக அனுப்புவதற்கு எனக்கு பணம் ரூபாய்.1,00,000/- தர வேண்டும் என்றும், அப்படி பணம் கொடுத்தால் தான் விசாரணை அறிக்கையில் மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் திருமதி.சங்கீதா அவர்களிடம் கையொப்பம் பெற்றுத் தருவேன் என்றும் நான் சொன்னால்தான் அவர் கையொப்பம் செய்வார் என்றும் தெரிவித்தார். மேலும் பணம் தரவில்லை என்றால் அறிக்கை தயார் செய்து அனுப்ப காலதாமதம் ஆகும் மற்றும் உங்களுக்கு சாதகமாக இருக்காது என்றும் தெரிவித்தார். அதற்கு நான் தாங்கள் கேட்ட பணம் ரொம்ப அதிகமாக உள்ளது என்றும் அவ்வளவு பணம் என்னால் தர இயலாது என்றும் தெரிவித்தேன். அதற்கு அவர் பணத்தை குறைத்துக் கொண்டு ரூ.50,000/-த்தை கொடுக்குமாறு தெரிவித்தார். அதற்கு நான் பணம் ரூபாய்.50,000/- தற்போது என்னிடம் இல்லை என்று தெரிவித்தபோது, அதற்கு

**(FIR in Kanchipuram V&AC, Cr.No.13/AC/2021/KM, continue )**

திருமதி.பிரேமா அவர்கள் ரூபாய்.50,000/-த்தை இரு தவணைகளாக கொடுக்குமாறும் முதல் தவணையாக ரூ.25,000/-ம் பணத்துடன் காலை 29.11.2021-ந் தேதி அலுவலகத்திற்கு அருகே வந்து என்னிடம் செல்போனில் பேசுமாறும் மீதி பணம் ரூ.25,000/-த்தை விசாரணை அறிக்கையை பெறும்போது கொடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார், அதன்பிறகு திருமதி.பிரேமா அவர்கள் இது சம்மந்தமாக என்னை செல்போனில் அடிக்கடி தொடர்புகொண்டு பேசுவார். அதன் பின்பு நான் என்னுடைய குடும்பத்தாரிடம் திருமதி.பிரேமா அவர்கள் விசாரணை அறிக்கையை நமக்கு சாதகமாக தர ரூ.50,000/-ம் லஞ்சமாக கேட்பதாக தெரிவித்தேன். என் குடும்பத்தாருக்கும் எனக்கும் காஞ்சிபுரம் சமூக நலத்துறையில் பணிபுரியும் திருமதி.பிரேமா அவர்களுக்கு லஞ்சமாக கொடுக்க விருப்பமில்லை. எனவே அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடிவு செய்தோம். எனவே நான் அவர் கேட்ட முதல் தவணை லஞ்சப்பணம் ரூ.25,000/-த்தை எடுத்துக்கொண்டு அவர் மீது சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ள காஞ்சிபுரம் லஞ்ச ஒழிப்புத்துறைக்கு இன்று 29.11.2021-ந் தேதி வந்து இப்புகார் மனுவை கொடுக்கிறேன். நீங்கள் எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைக்கு முழு ஒத்துழைப்பு தருகிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிக்கு. Sd/-.... (திரு.கிருஷ்ணபிரசாத், தேதி. 29.11.2021).

Honoured Madam,

Received the complaint from Tr.Krishnaprasad, Age-32, S/o Vijayakumar, No.29/14, 12th Street, Vinobaji Nagar, Asthinapuram, Crompettai, Chennai-64 on 29.11.2021 at 09.00 hrs and after getting proper permission from DVAC on this complaint enquiry conducted in a discreet manner. Based on the out-come of the discreet enquiry, there is no enmity, genuineness of the complaint and the reputation of the accused is also verified. Since, there is prima-facie made out to register FIR on said complaint against accused Tmt.Prema, Assistant, District Social Welfare Office, Kanchipuram. Hence, I registered a case in Kanchipuram V&AC, Cr.No.13/AC/2021/KM u/s 7 of the PC Amended act 2018 on today 29.11.2021 at about 10.00 hrs. The original FIR along with complaint sent to Hon'ble Chief Judicial Magistrate Cum Special Judge, Chengalpet and other copies sent to officers concerned and took up investigation.

29/11/2021

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Kanchipuram-631501.